ஓம் ஸ்ரீ சாய்ராம்

# ஸ்ரீ சாய்ராம்
# ஸ்ரீ தக்ஷிண ஷீரடி ஸ்ரீ சாய் பாபா ஆலய
## புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண
# அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிக்கை




ஸ்ரீ
# சாய் பாபா மந்திர்

**ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி** வளாகம்,
**"சாய் லியோ நகர்", மேற்கு தாம்பரம்**, சென்னை - 44
(பூந்தண்டலம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம்)

நாள் :
**06.09.2026,**
ஞாயிற்றுக்கிழமை

நேரம் :
காலை 7.30 மணி முதல்
8.30 மணி வரை

ஸ்ரீ சாய் பாபா துணை



# ஸ்ரீ சாய்ராம்

## ஸ்ரீ தக்ஷிண ஷீரடி ஸ்ரீ சாய் பாபா ஆலய

### புனராவர்த்தன ஜீர்னோத்தாரண

## அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிக்கை

நமஸ்தே ஸ்ரீ ஸத்குரவே, பக்தவத்ஸல தாயினே!
ஞான மார்க ப்ரதர்சாய, சாய் நாதாய மங்களம்!!

நமது பாரத தேசத்தில் ஆன்மீகத்தை வளர்த்து மக்கள் அறநெறியில் வாழ்வதற்கும் பக்தர்களின் துயர் நீங்கவும் தக்ஷிண ஷீரடி என்று விளங்க கூடிய **ஸ்ரீ சாய்ராம் கல்லூரி வளாகத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டில் சித்தி விநாயகர், ந்ருத்த கணபதி, தக்ஷிணா மூர்த்தி, மஹாவிஷ்ணு, ப்ரம்மா துர்கை, தத்தாத்ரேயர், ஆஞ்சனேயர்** ஏனைய பரிவார மூர்த்திகளுடன் கூடிய ஸ்ரீ ஷீரடி சாய்பாபாவிற்கும் புதிய ஆலயம் அமைக்க பெற்று தம்மை நாடி வந்த பக்தர்களுக்கு அருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

மேலும் ஆலயம் திருப்பணி நடைபெற்று பஞ்ச வர்ணம் தீட்டி புனராவர்த்தன ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நிகழும் பராபவ வருடம் **ஆவணி மாதம் 20 ஆம் தேதி (06.09.2026) ஞாயிற்றுக்கிழமை** தசமி திதி திருவாதிரை நக்ஷத்திரம் சித்த யோகம் கூடிய சுபதினத்தில் **காலை 7.30 மணி முதல் 8.30 மணிக்குள்** கன்யா லக்னத்தில் சாய் நாதரின் அருளால் நடைபெற உள்ளது - பக்தர்கள் அனைவரும் (கீழ் கண்ட நிகழ்ச்சி நிரல் படி) தவறாமல் வந்து கும்பாபிஷேகத்தை கண்டு பாபாவின் அருளை பெற வேண்டுகிறோம்.

இப்படிக்கு
நிர்வாகம்

# நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| **04.09.2026**<br>ஆவணி 18<br>**வெள்ளிகிழமை** | காலை<br>08.00 மணிக்கு | மங்கள வாத்தியம், ஐங்கரன் பூஜை,<br>புண்யாஹவாசனம், யஜமான சங்கல்பம்,<br>கணபதிஹோமம் லக்ஷ்மிஹோமம்,<br>நவக்ரஹஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை,<br>ப்ரஸாதம் வழங்குதல். |
| **04.09.2026**<br>ஆவணி 18<br>**வெள்ளிகிழமை** | மாலை<br>04.00 மணிக்கு | மங்கள இசை, கணபதி பூஜை, வாஸ்து சாந்தி<br>ப்ரவேச பலி, ம்ருத்சங்க்ரஹணம், அங்குரார்பணம்<br>காப்புகட்டுதல் (ஆசார்யரக்ஷாபந்தனம்)<br>கும்ப அலங்காரம் கலாகர்ஷணம், துனியிலிருந்து<br>வேள்விக்கு அக்னி எடுத்துப் முதற்கால யாக<br>பூஜைகள் மூல மந்திரத்துடன் ஷன்னவதிஹோமம்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, ப்ரஸாதம் வழங்குதல். |
| **05.09.2026**<br>ஆவணி 19<br>**சனிக்கிழமை** | காலை<br>08.00 மணிக்கு | மங்கள வாத்தியம், கணபதி பூஜை,<br>புண்யாஹவாசனம், சோமகும்ப பூஜை<br>இரண்டாம் கால பூஜைகள் வேதபாராயணம்,<br>மூல மந்திரத்துடன் ஷன்னவதிஹோமம் யந்திர<br>ஸ்தாபனம் மற்றும் அஷ்டபந்தன மருந்து<br>சாற்றுதல் பூர்ணாஹுதி,<br>தீபாராதனை, ப்ரஸாதம் வழங்குதல். |
| **05.09.2026**<br>ஆவணி 19<br>**சனிக்கிழமை** | மாலை<br>05.30 மணிக்கு | மங்கள வாத்தியம், கணபதி பூஜை,<br>புண்யாஹவாசனம், சோமகும்ப பூஜை<br>மூன்றாம் கால பூஜைகள் மூல மந்திரத்துடன்<br>ஷன்னவதிஹோமம் சுவாசினி பூஜை<br>தீபம் ஏற்றுதல் பிம்பசுத்தி ரக்ஷாபந்தனம்,<br>தத்வார்ச்சனை, வேதபாராயணம்,<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, ப்ரஸாதம் வழங்குதல். |
| **06.09.2026**<br>ஆவணி 20<br>**ஞாயிற்றுக்கிழமை** | காலை<br>06.15 மணிக்கு | மங்கள இசை, ஹரித்ரா கணபதி ஆராதனை<br>புண்யாஹவாசம், சோமகும்ப பூஜை நான்காம்<br>கால பூஜைகள் மூல மந்திரத்துடன் ஷன்னவதிஹோமம். |
| | 07.15 மணிக்கு | பூர்ணாஹுதி, |
| | 07.30 மணிக்கு | யாத்ராதானம், கடம் புறப்பாடு. |
| | 08.30 மணிக்கு | கோபுர கலச கும்பாபிஷேகம். |
| | 09.00 மணிக்கு | பரிவார மூர்த்தியுடன் ஸ்ரீ ஷீரடி சாய்பாபா கும்பாபிஷேகம். |
| | 09.30 மணிக்கு | சிறப்பு அலங்காரம் மற்றும் அர்ச்சனைகள்<br>தீபாராதனை ப்ரஸாதம் வழங்குதல். |
| | 10.00 மணிக்கு | அன்னதானம். |

"சுபம்"

## ஸ்ரீ சாய்பாபாவின் 11 உபதேசப் பொன்மொழிகள்

- ஷீரடி ஸ்தலத்தை எவர்; ஒருவர் மிதிக்கின்றாரோ, அவருடைய துன்பம் ஒரு முடிவை அடைந்து, சௌகரியத்தை அடைகிறார்கள்.
- துவாரக மாயியை அடைந்த மாத்திரத்தில் பெரும் துன்பத்திற்கு உள்ளானவர்களும், மிகுதியான சந்தோஷத்தை அடைவார்கள்.
- இவ்வுலகை விட்ட பிறகும் சர்வ சக்தியுடன் நான் வேலை செய்வேன்.
- என்னுடைய சமாதி என் பக்தர்களுக்கு அநேக ஆசீர்வாதங்களையும், புத்திமதிகளையும் கொடுக்கும்.
- என்னுடைய பூத உடல் என் சமாதியிலிருந்து பேசும்.
- என்னுடைய சமாதியிலிருந்து கொண்டே நான் மிகவும் சுறுசுறுப்பாகவும், தீவிரமாகவும் செயல்படுவேன்.
- என்னை நாடி வருபவர்களுக்கும், என்னை தஞ்சம் அடைபவர்களுக்கும், என் உபதேசத்திற்காக என்னிடம் தீவிர நம்பிக்கை உள்ளவர்களுக்கும் நான் எப்பொழுதும் உயிருடன் இருக்கிறேன்.
- நீ என்னை அடைந்தால், நான் உன்னைக் கடாக்ஷிக்கிறேன்.
- நீ என் பேரில் உன் பளுவை சுமத்தினால் நான் நிச்சயமாக அதைத் தாங்குவேன்.
- நீ என் உபதேசத்திற்காகவும், உதவிக்காகவும் என்னை அடைந்தால் அவைகளை உடனே நான் உனக்குக் கொடுப்பேன்.
- என்னுடைய பக்தர்களுடைய வீட்டில் ஒரு போதும் தேவை என்பதே இருக்காது.

நீ என்னை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால்,
நான் உன்னை நோக்கி பத்து அடி எடுத்து வைப்பேன்.

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

LEO Housing (P) Ltd.
www.leohousing.in

MJF.LN. LEO MUTHU
Founder Chairman - Sairam Institutions

உங்கள் சேவைக்கு : 044 - 2251 2222 / 4226 7777